DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.140/2021**

**P.W.1**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | வெள்ளைபாண்டி |
| Father Name | : | பாலன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026.
(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.)

<u>**அரசு தரப்பில் முதல் விசாரணை :**</u>

நான் தற்போது மள்ளபுரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன இரத்தினவேல் எனது மூத்த மகன் ஆவார். எனக்கு நான்கு மக்கள் உண்டு. அதில் 3 ஆண் மக்கள், ஒரு பெண் மக்கள் ஆகும். ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்துபோன எனது மகன் கல்லூரி வரை படித்துள்ளார். எனது மகன் இரத்தின வேல் திருப்பூருக்கு சாயப்பட்டறைக்கு வேலை சேர்ந்தார். அந்த கம்பெனியில் 1வது எதிரி வேலை பார்த்து வந்தார். என்னுடைய மகன் பார்த்த வேலை முதலாளிக்கு பிடித்து போனதால் என் மகனை மட்டும் வேலைக்கு வைத்துகொண்டு சந்தானத்தை வேலையில் நிறுத்திவிட்டார்கள். வேலை பார்த்த சமயத்தில் கொரோனா காலமாக இருந்ததால் கம்பெனி லீவின் போது என் மகன் இரத்தினவேல் எங்கள் மள்ளபுரத்திற்கு வந்துவிட்டார். அதன்பிறகு என் மகன் இரத்தினவேல் ஊரில் தெருவில் தேவேந்திர குல மண்டபம் அருகே சென்று கொண்டிருந்த போது, 1வது எதிரி சந்தனம், 2வது செல்லக்கண்ணு மற்றும் 3வது எதிரி அன்னக்கிளி ஆகியோர்கள் தேவிடியா மகனே, அவுசாரி மகனே என்று என் மகனை குத்தாமல்

விடமாட்டேன் என்று என்னிடம் சொன்னார்கள். அந்த சமயம் என்னுடைய மகன் இரத்தினவேல், என் மகள் ராதிகா ஆகியோர்கள் சண்டை வருகிற என்று விலக்க வந்தார்கள். என் மகன் இரத்தினவேல் வந்தவுடன் இரத்தினவேலுவை உன்னால் தான் கம்பெனியில் வேலை போனது என்றும், வருமானம் போனது என்றும், அதற்கு காரணம் நீதான் என்று சொல்லி 1வது எதிரி சந்தனம் கத்தியால் என் மகன் இரத்தினவேலை வலது பக்க மார்பின் காரை எலும்பு பகுதியிலும், பிறகு இடது பக்க விலா பகுதியிலும், 2வது எதிரி கத்தியால் என் மகனின் இடது பக்க முதுகில் குத்தினார். அந்த இடத்திற்கு உடனே மணி, சமயபாண்டி, ரகுபதி, நல்லுசாமி ஆகியோர்கள் அங்கு வந்து என் மகனை, மணி என்பவரின் இருசக்கர வாகனத்தில் வைத்து மணி இருசக்கர வாகனத்தை ஓட்டிச்செல்ல நடுவில் என் மகன் இரத்தினவேலுவை உட்காரவைத்து சமயபாண்டி பின்னால் உட்கார்ந்து எழுமலை மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள். மேலும் ரகுபதி மற்றும் நல்லுச்சாமி ஆகியோர்கள் தனியாக மற்றொரு இருசக்கர வாகனத்தில் பின்தொடர்ந்து வந்தார்கள். எழுமலை மருத்துவமனையில் இருந்து என் மகனை ஆம்புலன்ஸில் வைத்து உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். அங்கிருந்து என் மகனை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார்கள். வரும் வழியில் என் மகன் இறந்துவிட்டதாக சமயபாண்டி எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். நான் உடனே மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தேன். M.கல்லுப்பட்டி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரிலுள்ள மற்றொரு கையொப்பம் யாருடையது என்று எனக்கு தெரியவில்லை. நான்

காவல்நிலையத்திற்கு சென்ற போது கேசாரி என்பவர் உடன் வந்தார். போலீஸார் என்னை விசாரிக்கவில்லை. தற்போது சாட்சி போலீஸார் தன்னை விசாரித்ததாக கூறுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :- மனுவின் பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.16 15:39:07 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.